DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**CC.No.148 /2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | சுபுநிஷா | Age | : | 36 |
| W/N. | : | செய்யது பைசுதீன் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | மேலக்கோட்டை | | | |
| Taluk | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 16-th day of June 2022.

**16.06.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் மேலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன்.19.05.2016 ம் தேதி நானும் எனது கொழுந்தனும் இராமநாதபுரத்தில் எனது தம்பி மனைவிக்கு பிறந்து இருந்த குழந்தையை பார்த்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் மேலக்கோட்டை ECR ரோட்டிற்கு அருகில் வந்து கொண்டு இருந்தோம். இராமேஸ்வரத்தில் இருந்து தேவிப்பட்டினம் செல்வதற்காக கார் ஒன்று அதிவேகமாக வந்து எங்களின் இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியது. ஆஜர் எதிரி தான் அந்த வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார். ( **சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்)**

அந்த விபத்தில் எனது கொழுந்தன் விபத்துக்குள்ளாகி மருத்துவமனை செல்லும் வழியில் இறந்துவிட்டார். எனக்கு வலது கால் முட்டியில் அடிபட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளேன். வலது கையில் காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைத்துள்ளார்கள். இடது காலில் காயம் ஏற்பட்டு இன்று வரை காயம் ஆறவில்லை. வேதனையோடு இருக்கிறேன். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிசிக்சையில் இருந்த போது போலீசார் வந்து விசாரித்து நடந்த சம்பவத்திற்கு வாக்குமூலம் பெற்றார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் அந்த வாக்குமூலத்தை எழுதி என்னிடம் படித்து காட்டி கையெழுத்து கேட்டார்கள். நான் மிகுந்த காயங்களுடன் இருந்ததால் எனது இடது கை பெருவிரல் ரேகை பதிவு செய்து கொடுத்தேன். என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1– ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு கு.வி</u>**

நான் இராமநாதபுரம் அரசு மருத்துவனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் நான் வாக்குமூலம் அளித்த பின் மயங்கிய நிலைக்கு சென்றதால் என்னை எப்போது மதுரையில் உள்ள விக்ரம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்தேனா என்றால் எழுத முடியாத காரணத்தினால் நான் வாய் வழியாகத் தான் வாக்குமூலம் கொடுத்தேன். அதை அவர்கள் பதிவு செய்து கொண்டனர். எனக்கு விபத்து ஏற்பட்டு முகத்தின் இருபுரமும் காயம் ஏற்பட்டது என்றால் வலுது பக்க முகம், கை, காலில் காயம் ஏற்பட்டது. போலீசார் விசாரணையில் எனக்கு முகத்தின் இருபுரமும் காயம் ஏற்பட்டது என்று சொன்னேனா இல்லை ஒரு புறம் மட்டும் காயம் ஏற்பட்டது என்று சொன்னேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனக்கு முகத்தின் இருபுறமும் காயம் ஏற்பட்டதால் என்னால் சம்பவம் நடந்த அன்று வாக்குமூலம் கொடுத்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

விபத்து நடந்து சுமார் 10 நாட்கள் கழித்து தான் எனக்கு சுயநினைவு வந்தது. மேலக்கோட்டையில் இருந்து இராமநாதபுரம் வரவேண்டும் என்றால் மேலக்கோட்டை பேருந்து நிறுத்தம் அல்லது மாடக்கொட்டான் பேருந்து நிறுத்தத்தில் தான் பஸ் ஏற வேண்டும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடக்கும் போது வடக்குப்பக்கம் பார்த்து தான் இருந்தேன் என்றால் சரியல்ல. காட்டுரணிக்கு எதிராகத்தான் மேலக்கோட்டை கிராமம் உள்ளது என்றால் சரிதான். காட்டுரணி சாலையையும், மேலக்கோட்டை சாலையையும் ECR சாலை தான் பிரிக்கிறது என்று சொன்னால் சரிதான். ECR சாலையில் இருந்து காட்டுரணி சாலை செல்லும் வழியில் கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது எனது கொழுந்தனாருக்கு வயது 20 அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடக்கும்போது எனது கொழுந்தனார் தலைக்கவசம் ஏதும் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் அணிந்துருந்தார்.

நான் ஆஜர் எதிரியை விபத்துக்குப்பின் இன்று தான் பார்க்கிறேன் என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள் அதன் பின்பு என்னை விசாரிக்க அழைத்தபோது மன உளைச்சல் அதிகமாக இருந்ததால் நான் பார்க்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். எனது கொழுந்தனார் அஜாக்ககிரதையாகவும் அதிவேகமாகவும் வண்டி ஓட்டும் பழக்கம் உடையவர் என்று சொன்னால் சரியல்ல அவர் மிகவும் மெதுவாகத்தான் ஓட்டுவார். என் கொழுந்தனார் வண்டியை வேகமாக ஓட்டியதால் தான் தெற்கிலிருந்து வடக்காக வந்த காரின் டயர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் மெதுவாக சென்றுஇருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல நாங்கள் வண்டியில் நின்று கொண்டு தான் இருந்தோம். இந்த விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் ஏற்படவில்லை என் கொழுந்தனாரின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்று

சொன்னால் சரியல்ல. நான் புகாரே கொடுக்கவில்லை என்றாலும் நான் மயக்கத்தில் இருக்கும்போது கைரேகையை பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல.

வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(ஒப்பம்/-க. பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண். II
இராமநாதபுரம்.